**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.642/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 5 |
| Name | : | மாரியப்பன், 54 |
| Father Name/Husband Name | : | கிருஷ்ணசாமி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of June 2026.

**(Accused absent. 355 BNSS petition filed and allowed).**

<u>**முதல் விசாரணை**</u>

1 நான் தற்போது கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 16.06.2025 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு நாலாட்டின்புதூர் காவல் நிலைய பெண் தலைமை காவலர் 861 நிலைய பொறுப்பில் இருந்த போது வாதி பவித்ரா என்பவரிடம் புகார்மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.165/2025 BNS பிரிவுகள் 304(2) ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2 அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை எனது பார்வைக்கும் வைத்தார். மேற்படி வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 22.40 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுப்பையா மற்றும் முத்துகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்தன். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3 பின்பு பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்பு 17.06.2025 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு வாகன தணிக்கை செய்த போது கழுகுமலை – நாலாட்டின்புதூர் ரோட்டில் மேற்கேயிலிருந்து கிழக்கு நோக்கி TN 67 H 9679 Super splender வாகனத்தில் வந்தவரை விசாரிக்க முன்னுக்கு பின்னாக பதில் அளித்து பின்னர் திலிபன், வயது 33, மொட்டமலை, வடக்கு தெரு என்று கூறிய நபரை கைது செய்து காலை 10.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து சாட்சிகள் மாரிசரவணன் மற்றும் முத்துராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி திலிப்பனை எந்தவித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோயின்றி காலை 10.15 மணிக்கு எதிரி திலிப்பன் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து மேற்படி இருச்சக்கர வாகனம் மற்றும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட Redmi செல்போனை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகவும், அத்தாட்சி அ.சா.ஆ.9 மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.10 ஆகவும், மேற்படி TN 67 H 9679 Super splender இருச்சக்கர வாகனம் அ.சா.பொ.1 ஆகவும், Redmi செல்போன் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் எனது விசாரணையிலும், சாட்சிகள் விசாரணையிலும் எதிரி குற்றம் செய்தது புலனானதால் வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது 20.06.2025 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

5.நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் வாதி புகார் கொடுத்ததாகவும் சொல்வதும் அதனை பெற்று நிலைய காவலர் வழக்கு பதிவு செய்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததாக சொல்வதும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

7.வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.